**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 367/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 13 |
| நாள் | : | 16.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.D.S.Saravanan | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | Sathyanarayanamoorthy | தொழில் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

கடந்த 07.03.2024 அன்று சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசியராக 10.40 மணி அளவில் பணியில் இருந்த போது D6 பொதட்டுர் பேட்டை காவல் நிலைய குற்ற எண்.145/2024 சம்மந்தப்பட்ட சண்முகம் என்ற 34 வயதுடைய ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதத்தை சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் சுகுமாரன் என்பவரிடம் பெற்று பிரேத பரிசோதனை முற்பகல் 10.50 மணியளவில் தொடங்கப்பட்டது. பிரேத பரிசோதனையின் போது உடல் முழுவதும் பிரேத விரைப்பு தண்மை காணப்பட்டது. பிரேத பிரசோதனையின் போது காணப்பட்ட விவரங்கள் பின்வருமாறு

போதிய போஷாக்குடைய ஆண் பிரேதமானது வெள்ளை நிற வேட்டி, பழுப்பு நிற அரைக்கால் சட்டை மற்றும் வெள்ளை நிற மருத்துவ உடையுடன் காணப்பட்டார்.

பிரேத பரிசோதனையின் போது காணப்பட்ட இறப்பிற்கு முந்தைய காயங்கள் பின்வருமாறு

1) 2 x 1 cm x முச்சுக்குழாய் ஆழமுள்ள அறுவை சிசிச்சையினால் ஏற்பட்ட கிழிந்த காயம், கழுத்தின் முன்பக்க கீழ் பகுதி காணப்பட்டது.

2) சீரற்ற காயத்தினால் ஏற்பட்ட சிரங்கு

a) 3 x 2 cm நெற்றியின் நடு பகுதியிலும்

b) 5 x 3 cm வலது கண்ணில் வெளிப்புறத்தில் தொடங்கி வலது கண்ணம் வரை

c) 2 x 1 cm வலது முன்னங்கையின் முன் பகுதியில் நடு 3ம் பாகத்திலும்

d) 4 x 1 cm வலது காலின் உட்பகுதியில் நடு 3ம் பாகத்திலும்

**3) தலை**

32 cm அறுவை சிகிச்சையினால் தையிலிடப்பட்ட காயம். இடது முன் நடு மற்றும் பக்கவாட்டு மண்டையில் காணப்பட்டது. தையல்களை பிரித்து பார்த்ததில் அதன் விளிம்புகள் சீராகவும், ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொள்ளாமல் காணப்பட்டது. மண்டையின் தோலை பிரித்து பார்த்ததில் 12 x 8 cm மண்டையின் தோல் ஆழ உள்ள கருஞ்சிவப்பு கன்றிய காயம் நடு மற்றும் பின்னந்தலையிலும் காணப்பட்டது. 15x 14 cm அளவிலான மூளையை சுற்றியுள்ள ஜவ்வுகள் மற்றும் இடது முன் நடு மற்றும் பக்கவாட்டு எலும்புகள் அகற்றப்பட்ட நிலையில் காணப்பட்டது. கபாலத்தை விலக்கி பார்ததில் 6 x 4 cm மெல்லிய கருஞ்சிவப்பு ரத்த கசிவு டூரா என்னும் ஜவ்வுக்கு கீழ் வலது மூளையின் நடு பகுதியில் காணப்பட்டது. 4 x 2 x 1 cm கிழிந்த காயம் இடது பக்கவாட்டு மூளையின் அடிப்பகுதியில் காணப்பட்டது. கபாலத்தின் அடிப்பகுதி நல்ல நிலையில் காணப்பட்டது. இதர பிற உள்ளுப்புகள் சாதராண நிலையில் காணப்பட்டது.

உடல் உள் உறுப்புகள் சேகரித்து வட்டார தடயஅறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி பெற்றப்பட்ட அறிக்கையில் எந்த நஞ்சுவோ, மதுவோ காணப்படவில்லை. மேற்கூறிய நபர் அவருக்கு தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளினால் இறந்திருக்க கூடும் என்று சான்று அளித்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.8 ஆகும்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** இல்லை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.